# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 19 வியாழக்கிழமை 02.05.2024 கதிர் 247







# புங்குடுதீவு மனிதப் புதைகுழியில் பெண்ணொருவரின் எலும்புக்கூடு

## அகழ்வுப் பணிகள் நிறைவு





யாழ்ப்பாணம் – புங்குடுதீவு கடற்கரை பகுதியில் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக இன்று காலை ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் மதியத்துடன் நிறைவுக்கு வந்தன.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில் ஆலயச் சூழலில் கிடங்கு வெட்டியபோது, மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளிவந்தன

2 ➤

# 9 கோடி 30 லட்சம் ரூபா சொத்து மன்னாரில் அதிரடியாக முடக்கம்



பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் மேற் கொள்ளப்பட்டு வரும் யுக்திய தேடுதல் நடவடிக்கையின் கீழ் குற்றப் புலனாய்வு பிரிவு கீழ் பணிக்கப்பட்ட விசாரணைக்கு அமைவாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மன்னாரில் கைதான சந்தேகநபர் ஒருவரின் 9 கோடியே 30 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் இன்று முடக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபர் ஒருவருக்குச் சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்கலாக 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் மேற்படி நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேகநபர்

2 ➤

# நாட்டையே பிச்சைக்கார நாடாக்கிய ஆட்சியாளர்களின் கீழ் நடைபெறுகின்ற கடைசி மே தின பேரணியே இது

## அனைவரையும் ஒன்றிணையுமாறு மே தின உரையில் அனுர குமார அழைப்பு



மூன்று வீதமான ஆதரவை ஐம்பத்தொரு வீதமாக மாற்றுவதென்பது அதிசயம் அல்லது மந்திரம் என எதிரணியினர் கூறினாலும், அது இன்று நிஜமாகி வருகின்றது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்று (1) தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியானது இந்நாட்டின் வரலாற்றில் கட்டியெழுப்பப்பட்ட வலுவான ஒரு மக்கள் இயக்கமாகும். இந்த வெற்றியை மாபெரும் வெற்றியாக மாற்றுவதற்கு அனைவரும் ஒரே மட்டத்திலிருந்து ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2 ➤

# பொதுஜன பெரமுனவின் 69 லட்சம் வாக்குகளும் தமது மடியில் வந்து விழும் என சில கட்சிகள் காத்துள்ளன

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மே தின உரை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இந்த மேடையை நோக்கித்தான் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் அவதூறு பரப்பி வருகின்றனர். அந்த பிதற்றல் தலைவர்களுக்கு இன்னும் அதிகாரம் நம்மிடம் தான் இருக்கிறது என்பது தெரியும். அவர்கள் எமது 69 லட்சம் வாக்குகளும் தமது மடியில் வந்து விழும் என்று காத்திருக்கிறார்கள்.

பொரளை கெம்பல் மைதானத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். வரலாற்றில் அதிக தவறுகளை செய்தவர்களின் மடியில் விழ வேண்டாம் என மக்களை கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி மேலும் கூறியதாவது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அழிக்க சில சக்திகள் தயாராக உள்ளன. எவ்வாறாயினும், நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவைச் சுற்றி திரண்டுள்ளனர். அதிகாரம் இல்லாத காலத்திலும் மக்கள் எம்முடன் இருந்தார்கள். இந்த நாட்டின் தொழில் துறையிலும் மற்றும் விவசாய துறையிலும் பொதுஜன பெரமுனவே மக்களின் பலத்தை கொண்டுள்ளது. பெரும்பாலான மக்கள் ஆதரவு நமது பொதுஜன பெரமுனவிற்கே உள்ளதென்பதை நம்மை அவதூறாகப் பேசுபவர்களுக்கு நன்றாக தெரியும். அவர்கள் அந்த 69 லட்சத்தை பங்கு போட்டுக் கொள்ளவே முயற்சிக்கின்றனர்.

வரலாற்றில் அதிக தவறுகளை இழைத்து இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு கேடு விளைவித்தவர்களின் மடியில் விழ வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். இன்றளவும் இந்நாட்டின் தேவைகளை நிறைவேற்றும் ஆற்றல் மொட்டு கட்சிக்கு மட்டுமே உள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு கட்சி ஆதரிக்கும் வேட்பாளர் மாத்திரமே வெற்றி பெறுவார் என்பதை கிராமங்களுக்கு சென்று கூறுங்கள்.

2 ➤

## 9கோடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2002 ஆம் ஆண்டு அரச வீட்டுத்திட்டம் ஒன்றைப் பெற்று இரண்டு படகுகளை வைத்து சாதாரண குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் 2019 பின்னர் குறிப்பிட்ட காலத்துக்குள் பல கோடி சொத்துக்களைச் சேர்த்துள்ளார்.

அதனடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் சொத்து முடக்கல் பிரிவினர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இன்று நீதிமன்ற அனுமதியைப் பெற்று வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜசேகர மேற்பார்வையின் கீழ் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் தலைமையில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சட்டவிரோத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் தற்காலிகமாக இன்றில் இருந்து 7 தினங்களுக்குச் சந்தேகநபரின் சின்னக்கடையில் காணப்படும் கடைத் தொகுதியுடன் கூடிய வீடு ஒன்றும், தலைமன்னார் பகுதியில் உள்ள விசாலமான வீடு ஒன்றும், சொகுசு வாகனம் ஒன்றும் முடக்கப்பட்டுள்ளன.

அதேநேரம்சந்தேகநபர்மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## புங்குடுதீவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனைத் தொடர்ந்தே கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்து விரைந்த பொலிஸார், அவ்விடத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்த நிலையில் அவ்விடத்தில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதனடிப்படையில் இன்று நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் நளினி சுபாகரன், சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தொல்லியல்துறை அதிகாரி மணிமாறன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், பொலிஸார், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அகழ்வின்போது பெண்ணொருவரினுடையதாகக் கருதப்படும் எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டது. எலும்புக்கூட்டுடன் செப்பு நாணயங்கள், துணி, அரிசி துகள்கள் என்பனவும் மீட்கப்பட்டன.

குறித்த பகுதி முன்னைய காலத்தில் மயானமாக இருந்திருக்கலாம் என்றும், குறித்த பெண்ணின் உடல் இந்து முறைப்படி கிரியை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு மற்றும் ஏனைய சான்றுப் பொருட்களைப் பார்வையிட்ட நீதிவான் இது தொடர்பான பகுப்பாய்வு பரிசோதனையை நடத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்க சட்ட மருத்துவ அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து அப்பகுதியில் அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்தன.

மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடு மற்றும் சான்றுப் பொருட்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

இதனைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன் சொத்துக்களை அரசுடமையாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்பதுடன் இதுபோன்று சட்டவிரோதமாகச் சொத்துக்கள் ஈட்டிய பல்வேறு நபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்று (1ஆம் திகதி) மாத்தறையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மே தின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது- "நமது நாட்டை அழித்த, நாட்டையே பிச்சைக்கார நாடாக்கிய ஆட்சியாளர்களின் கீழ் நடைபெறுகின்ற கடைசி மே தின பேரணியையே இன்று தேசிய மக்கள் சக்தி நடத்தியுள்ளது. இனிமேல் ஊழல்மிக்க ஆட்சியின் கீழான மே தினக் கூட்டங்கள் நடைபெறாது. அடுத்த மே தினம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் கொண்டாடப்படும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இன்று நாம் சந்திக்கும் அனைவரும் நாட்டில் நிலவும் இந்த சிஸ்டத்தை மாற்றுங்கள் என்கிறார்கள். விவசாய நிலங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் என எல்லா இடங்களிலும் லட்சக்கணக்கான மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் தங்கள் பார்வையை செலுத்தியுள்ளனர். எங்கள் வெளிநாட்டு தொழிலாளர்கள் உட்பட அனைவரும் எங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் எங்களைப் பார்க்கின்றனர்.

எங்களை நம்புவது மக்கள் மட்டுமல்ல. எமக்கு எதிரான அனைத்துக் கட்சிகளும் எம்மையே அதிகம் நோக்குகின்றன. நாம் தோல்வியடைய வேண்டும் என அந்த எதிரான கட்சியினர் காத்திருக்கிறார்கள். இப்போது நமக்கு இருமுனை சவால் உள்ளது. லட்சக்கணக்கான மக்கள் எங்களை எதிர்பார்ப்புடன் பார்க்கின்றனர் அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது முதலாவது சவால். இரண்டாவது, எதிர்தரப்பினர் எம்மால் ஏதாவது தவறு நேர வேண்டும் என காத்திருக்கின்றனர். நம்மீது நம்பிக்கை வைத்துள்ள அன்புமிக்க மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அதேவேளை, நமது எதிரிகளுக்கு எந்தவொரு வாய்ப்பும் கொடுக்காமல் பொறுமையுடனும் திட்டமிடலுடனும் இந்த கப்பலை வெற்றிப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும். இந்த சவால்கள் அனைத்தையும் வெற்றி கொள்வோம் இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ரணிலாலும் சஜித்தாலும் இந்நாட்டில் ஒழுக்கத்தைக் கொண்டுவர முடியுமா? இல்லை என்பதே பதில். இந்த நாட்டை கட்டியெழுப்ப ஒழுக்கம் அவசியம். சட்டத்தை மதிக்கும் அடிபணிந்த சமுதாயம் தேவை. அந்த சமுதாயத்தை கட்டியெழுப்பாமல் வெறுமனே விட்டுவிட முடியாது. அது நமது பொறுப்பு. நாம் அதனை செய்து காட்டுவோம். நாங்கள் கை வைத்திருப்பது ஒரு சாதாரண ஒரு விடயத்தில் அல்ல, தேசிய மக்கள் சக்தியானது வெறுமனே இன்னொரு கட்சிக்கு எதிரான மற்றுமொரு கட்சியாக கட்டமைக்கப்படவில்லை. மாறாக, இது இலங்கை வரலாற்றில் கட்டியெழுப்பப்பட்டுள்ள பலமான ஒரு மக்கள் இயக்கமாகும். கட்சி பேதங்கள், கட்சி கொடிகள் நிறங்கள் என பிரித்துப் பார்க்காமல் எல்லோரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது.

எனவே, எல்லா இக்கட்டான சூழ்நிலையிலும் நம்மை விட்டுப் பிரியாத பழைய தோழர்களையும், புதிதாக எங்களுடன் இணைந்துள்ளவர்களையும், இன்னும் வெளியிலிருந்து நம்மைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களையும் ஒரே சம நிலைக்குள் கொண்டு வருதல் வேண்டும்.

மூன்று சதவீத ஆதரவு ஐம்பத்தொரு சதவிகிதமாக மாறுவதற்கு அது மந்திர ஜாலமாக இருக்க வேண்டும் என சிலர் கூறுகிறார்கள். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இதுவொரு அதிசயமோ அல்லது மாய மந்திரமோ அல்ல. இது இந்த பூமியில் நடைபெறுகின்ற நிஜ நிகழ்வாகிவிட்டது. அது தான் உண்மை. இன்று, மிகப்பெரிய மக்கள் நம்பிக்கையும், மக்கள் சக்தியும் திசைகாட்டியைச் சுற்றி திரண்டுள்ளது.

வாழ்நாள் முழுவதும் எதிர்பார்ப்புகளுடன் பல பெரிய தியாகங்களை செய்துள்ளோம். ஆகையால், வெற்றியை நாம் எதிர்பார்த்திருந்தோம், இப்போது வெற்றியின் வாசலை எட்டியுள்ளோம். சகோதர சகோதரிகளே, இப்போது தான் நிறைய வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. நமது வெற்றியை மாபெரும் வெற்றியாக மாற்றுவதற்கு கடுமையாக உழையுங்கள். இதற்கு அனைவரின் ஆதரவும் ஒற்றுமையும் தேவை. நிச்சயம் வெற்றி பெறுவோம், அதற்காக ஒன்றுபடுவோம்!" (ரெம-06)

## பொதுஜன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாங்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணித்த போது அதில் பெரும் பாறையொன்று இருப்பதாக சிலர் கூறினார்கள். அதிக நெடுஞ்சாலைகளும், கொழும்பு துறைமுக நகரமும் உருவாக்காட்ட போது சேறு பூசும் விதமாக தவறான பிரச்சாரங்களை செய்தனர். அவ்வாறே, உமா ஓயா திட்டத்தை மேற்கொள்ளும் போதும் ஒவ்வொரு கதைகளை பரப்பினார்கள். உமா ஓயா காரணமாக இன்று மின்சாரம் மட்டுமன்றி, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு தேவையான நீரையும் பெறுகின்றனர்.

காலி முகத்திடல் போராட்டத்தின் காரணமாக வீழ்ச்சியுற்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்புமாறு சஜித் பிரேமதாசவிடம் கேட்ட போதிலும் அவர் ஏற்க மறுத்தார். அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது ஆனால் அவரும் வாய்ப்பை தவறவிட்டார். எப்படியிருப்பினும் உண்மையான மக்கள் ஆதரவு பொதுஜன பெரமுனவைச் சுற்றியே உள்ளது. அரசியல் கருத்தியல் எதுவாக இருந்தாலும், நாங்கள் எப்போதும் நாட்டு மக்களுடன் இருக்கிறோம். வியர்வை சிந்தி உழைக்கும் மக்களுக்காக நம்மை அர்ப்பணிக்கிறோம். வீழ்ந்த நாட்டை மீட்டெடுத்து வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் ஆற்றல் பொதுஜன பெரமுனவுக்கு மட்டுமே உள்ளது. (ரெம-07)




# முச்சக்கர வண்டிகளின் கட்டணங்கள் குறையாது!

*பெற்றோல் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள போதிலும் முச்சக்கர வண்டி கட்டணங்களை குறைக்க முடியாது என தேசிய முச்சக்கர வண்டி சங்கத்தின் தலைவர் மஹிந்த குமார தெரிவித்துள்ளார்.*

*தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு முச்சக்கரவண்டித் தொழில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவித்துள்ள அவர், "குறைந்த பட்சம் பெற்றோல் விலை 20 ரூபாவால் குறைந்தால் பயணிகளின் நலன் குறித்து சிந்திக்கலாம். மாறாக, பெற்றோல் விலை 3 ரூபாவால் குறைவதால் நமக்கு என்ன பலன் கிடைக்கப் போகின்றது? முச்சக்கர வண்டி உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்து வருகிறது. ஆகையினால் முச்சக்கர வண்டிக்கான கட்டண குறைப்பிற்கு சாத்தியமே இல்லை" என தெரிவித்துள்ளார்.*

*(ரெம-08)*

# விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்வுகள்





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து நடாத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாவின் அங்குரார்ப்பண நிகழ்வில், விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் அரங்கேறின.
(படங்கள் வி.ரி. சகாதேவராஜா)

# காரைதீவு ஆர்.கே.எம் பெண்கள் வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர மாணவர் தின நிகழ்வு

(சர்ஜுன் லாபீர்)

காரைதீவு ஆர்.கே.எம் பெண்கள் வித்தியாலயத்தில் க.பொ.த(சாஃத) மாணவர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.ரவிந்திரன் தலைமையில் இன்று கல்லூரியின் ஆரதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரும் பிரபல வளவாளருமான வை.ஹபிப்புல்லா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.சஞ்ஜிவன், பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி.விஜயரகுந்தன் உட்பட பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இம்முறை க.பொ.த (சாஃத) பரீட்சை எழுதும் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் பரிசளிப்பும் இடம்பெற்றதுடன் தேசிய மட்டத்தில் சாதனைகள் புரிந்த மாணவர்களைக் கௌரவித்தது பரிசில்களும் வழங்கப்பட்டன.






# காத்தான்குடி அல் ஹஸனாத் மாணவர்களை கல்வியில் ஊக்கப்படுத்துவதற்கு புது முயற்சி



(எம்.ஏ.ஏ.அக்தார் )

காத்தான்குடி, அல்ஹஸனாத் வித்தியாலயத்தில் இருந்து இந்த வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுத இருக்கும் மாணவர்களை ஊக்கப் படுத்தும் வண்ணம், மஸ்ஜிதுல் ஹஸனாத் ஜமா அத்தார் சங்கம், அல் ஹஸனாத் பாடசாலை பழைய மாணவர்கள் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து கல்வி மேம்பாட்டிற்கான பல திட்டங்களை முன் வைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இந்த வருடம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்று சித்தியடையும் மாணவருக்குப் பரிசாக வழங்குவதற்காக, முன்கூட்டியே துவிச்சக்கர வண்டி ஒன்றை மஸ்ஜிதுல் ஹஸனாத் ஜமா அத்தார் சங்க உப தலைவர் பஹ்ஜி தனது சொந்த நிதியில் அல்ஹஸனாத் பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பொறியியலாளர் றிஹாஜ், அப்துல் பாஸித், முஹம்மட் ஹஸன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தெற்கு, வடமேல் மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் இன்று நியமனம்




தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அதற்கமைய தென் மாகாண புதிய ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வடமேல் மாகாண புதிய ஆளுநராக நசீர் அஹமட் ஆகியோர் இன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் இதன்போது கலந்துகொண்டிருந்தார். (அ)

## புங்குடுதீவு கடற்கரைப் பகுதியில் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் கண்டெடுப்பு

### அகழ்வுப் பணிகள் இன்று ஆரம்பம்




யாழ்ப்பாணம் - புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையை அண்டிய கடற்கரைப் பகுதியில் மனித எலும்பு கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் இன்றையதினம் அகழ்வுப் பணிகள் ஆரம்பித்துள்ளன.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி சுபாகரன், சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், ஆலயச் சூழலில் அண்மையில் கிடங்கொன்றினை வெட்டியபோது, மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் வெளிவந்திருந்தன.

அதனைத் தொடர்ந்து கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அவ்விடத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்திருந்தனர்.

அதனையடுத்து அவ்விடத்தில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் இன்றையதினம் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவ்விடத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

## சுதந்திரக் கட்சியை மீட்பதே என் இலக்கு

### விஜயதாஸ திடசங்கற்பம்



“நான் மைத்திரிபால சிறிசேனவின் காவலன் அல்லன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்கவே வந்துள்ளேன். எனவே, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கட்சியைப் பலப்படுத்த முடியும்” - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக மைத்திரிபால தரப்பால் நியமிக்கப்பட்டவரும் நீதி அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது -

“நான் பதவிகளுக்காகச் சண்டையிடுபவன் அல்லன். சுதந்திரக் கட்சியைக் கைப்பற்றும் நோக்கமும் கிடையாது. கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கிலேயே பதவியை ஏற்றேன். இதன் பின்னணியில் வேறு சூழ்ச்சி எதுவும் இல்லை.

சுதந்திரக் கட்சியில் உள்ள எந்தவொரு தரப்புடனும் எனக்குப் பிரச்சினை இல்லை. நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்டவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளேன்.

ஒன்றிணைந்தால் கட்சியைப் பலப்படுத்தலாம். கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்” - என்றார். (அ)

## அரச கால்நடை வைத்தியர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டம்!



அரச கால்நடை வைத்தியர்கள் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இன்று மேற்கொண்டுள்ள இரண்டு நாள் சுகயீன விடுமுறை காரணமாக அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கு கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள கால்நடைகளுடன் வருகை தந்த மக்கள் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பளை ஆகிய கால்நடை வைத்திய அலுவலகத்தின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன. (02)

# கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய உயர்ஸ்தானிகரால் வாழ்வாதார உதவி

(எம் எப். நவாஸ்)

ஒலுவில் துறைமுக கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிப் பொதிகள் இந்திய உயர்ஸ்தானிகரால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், மாகாணசபை அமைச்சர் எம் எஸ். உதுமாலெவ்வை, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர், ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர் மீனவ சங்கத் தலைவர்கள், மற்றும் ஆழ்கடல் மீனவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அகில இலங்கை விஞ்ஞானப் போட்டியில் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி முதலிடம்

(நூருல் ஹூதா உமர்)

“சிறந்த எதிர்காலத்திற்கான ஸ்ரெம் கல்வி” எனும்தொனிப்பொருளின் அடிப்படையில்நாடளாவிய ரீதியில் தேசிய விஞ்ஞான அறக்கட்டளையினால் எதிர்கால இலங்கைக்கான ஸ்ரெம் கல்வி எனும் தலைப்பின்கீழ்பாடசாலைகளுக்கிடையில் விஞ்ஞான போட்டி நடாத்தப்பட்டது.



இதில், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் தரம் 9 – இருமொழிப் பிரிவில் கல்வி கற்கும் மாணவி பீஃனா தானீன் முகம்மது நௌஷத்தினால் முன்வைக்கப்பட்ட – “சிறந்த எதிர்காலத்திற்கான ஸ்ரெம் கல்வி” என்ற கட்டுரை, ஆங்கில மொழி பிரிவின் கீழ் அகில இலங்கை ரீதியில் முதலாம் நிலையினைப் பெற்றுள்ளது.

இது குறித்து தகவல் வழங்கிய பாடசாலை அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ், மாணவி பீஃனா தானீன் விதிவிலக்கான திறமை மற்றும் அர்ப்பணிப்பைவெளிப்படுத்தி, கடுமையான போட்டிகளுக்கு மத்தியில் தனித்து நின்று வெற்றி பெற்றுள்ளார்.

இந்த சாதனை பீஃனாவின் குறிப்பிடத்தக்க திறன்களை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், கல்வியில் புதுமை மற்றும் சிறந்து விளங்கும் எங்கள் கல்லூரியின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

அவரது வெற்றியினால் கல்லூரி பெருமிதம் அடைகின்றது, என்று தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# நெல்லூர் கலைமகள் மாணவர்க்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள நெல்லூர் கலைமகள் வித்தியாலய பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 60 மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர். பா. லோகேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. “ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்” எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது கற்றல் உபகரணங்களை, பல கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்நிகழ்வில் பாடசாலை இணைப்பாடவிதான இனணப்பாளர் சி.கண்ணன், முன்பள்ளி பாடசாலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கணேஸ் ஆகியோருடன், ஆயித்தியமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் து.வித்தியானந்தன், இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான சி.காந்தன், சி.துலக்சன், சனாதானன் ஆகியோரும் இணைந்துகொண்டு, 60 மாணவர்களுக்கு பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பவற்றை வழங்கிவைத்தனர்.




# கலைஞர்களுக்கான கௌரவிப்பும் அடையாள அட்டை வழங்கி வைப்பும்



(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கலைஞர்களை கௌரவித்து அவர்களுக்கான உதவித் தொகை மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு இன்று காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் மற்றும் மாவட்ட , பிரதேச கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

கலைஞர்களுக்கான காசோலைகள் மற்றும் கலைஞர் அடையாள அட்டைகள் என்பன இந்நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாற்பது கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் 2 பேர் கைது

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 40 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெண்ணொருவரும் அடங்குகின்றார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய கொட்டாவை ருக்மல் சந்தியில் கார் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது ஒரு கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் மீட்கப்பட்டது.

இந்தநிலையில் காரில் பயணித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது அந்தப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள வீட்டில் சோதனை நடத்தப்பட்டது.

அதன்போது 12 கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் போதைப்பொருள் வர்த்தகத்தால் ஈட்டப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் 15 இலட்சம் ரூபாவும் மீட்கப்பட்டது.

கைதான சந்தேகநபர் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றை வாடகைக்குப் பெற்று அதில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அவர் இரண்டு வீடுகளுக்கு உரிமையாளர் என்பது கண்டறியப்பட்டதுடன் அங்கும் சோதனைகள் நடத்தப்பட்டன.

குறித்த இரண்டு வீடுகளில் ஒன்றில் கொக்கெய்ன் மற்றும் ஐஸ் ரக போதைப்பொருட்களும் மீட்கப்பட்டன.

இதன்போது சந்தேகநபரின் மனைவியும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் டுபாயில் தலைமறைவாகியுள்ள திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய வாசன சமந்த பெர்னாண்டோ எனப்படும் டுபாய் கபிலவுக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சை மிளகாய் விலையில் வீழ்ச்சி - செய்கையாளர் பாதிப்பு!

அரசாங்கத்தின் நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேசத்தில் 300ற்கும் மேற்பட்டோர் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடுகின்ற நிலையில், தற்பொழுது பச்சை மிளகாய் 60தொடக்கம் 70ரூபாய்க்கே கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதனால், தமது உற்பத்திச் செலவையே ஈடு செய்ய முடியாத நிலையயிலுள்ளதாக விவசாயிகள் தெரிக்கின்றனர்.

தமது உற்பத்திக்கு நியாய விலையை வழங்க உரிய அதிகாரிகள் ஆவன செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தற்பொழுது பச்சை மிளகாயை அறுவடை செய்வதற்காக கிலோ ஒன்றுக்கு தாம் 30 ரூபாய் தொடக்கம் 40 ரூபாய் செலவு செய்வதாகவும், விற்பனை செய்யும் பொழுது 70 ரூபாய்க்கு இடைத்தரகர்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

பச்சை மிளகாயினை உலரவிடுவதற்கான இயந்திர வசதிகள் இல்லாத காரணத்தினால் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக நாளாந்தம் ஏற்படுகின்ற செலவினைக் கூட மீளப் பெற முடியாத நிலையில் மிளகாய்ச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (02)

# விமான நிலையத்தில் தங்க விற்பனை நிலையம் திறக்க அமைச்சரவை அனுமதி

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றை நடத்துவதற்கான விலை மனு கோரலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளுக்கு தங்க நகைகள் வாங்கும் வசதிகள் இல்லாததால், அதனை கவனத்திற் கொண்டே பயணிகளுக்கான புறப்படும் பகுதியில் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றை அமைக்க எயார் போர்ட்ஸ் என்ட் ஏவியேஷன் சேர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றை திறப்பதற்கும் அதற்குரிய விற்பனை நிலையத்தாரை கண்டறிவதற்கான விலைமனு கோரும் பிரேரணை, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரெம-11)








# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் எரிக் சொல்ஹெய்முடன் விசேட சந்திப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

சுற்றுச்சூழலை முறையாகப் பராமரிக்கும் சந்தர்ப்பத்தில்தான் எதிர்காலத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும்என்ற அடிப்படையில், கிழக்கில் சுற்றுச் சூழல் பராமரிப்பு தொடர்பான சர்வதேச அங்கீகாரத்தை பெறும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு முக்கிய கட்டமாக சுற்றுச் சூழல் தொடர்பான ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நேர்வேயின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிமான்ஸ / கிளாடி ஆகியோரை ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று திருகோணமலையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழலை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

கிழக்கு மாகாண சுற்றுச்சூழல் சூழல் பாதுகாப்புச் செயலாளர், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், நகரசபைச் செயலாளர்கள் மற்றும் அரச உயரதிகாரிகள் போன்றோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## எலிக்காய்ச்சல் அபாயம்! 65 இடங்கள் அடையாளம்

மினுவாங்கொடை சுகாதார வைத்திய பிரிவிலுள்ள 15 கிராமங்களில் எலிக்காய்ச்சல் அபாயம் இருகின்ற 65 இடங்களை தெரிவு செய்வதற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் எலிக்காய்ச்சலுக்கு எதிரான பாதுகாப்பு குறித்த அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி மாதேல்கமுவ, நெதகமுவ, பத்தடுவன, நில்பனகொட, ஹொரம் பெல, உடுகம்பொல, மெதகம்பிட்டிய தெவொல பொல, வோகொச்சிய, மாரபொல, யட்டியான, கொரச, வீதியவத்த, அஸ்கிரிய, கல்ஒலுவ ஆகிய பிரதேசங்கள் அதிக ஆபத்துள்ள கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இந்த அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் நோயாளர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளதாகவும், இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் 17 பேர் அடையாளம் காணப்பட்டு 2 மரணங்களும் பதிவாகியுள்ளதாகவும் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

Google Play
App Store



**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

Google Play
App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

**JRIDE TAXI APP**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.05.2024இல் வெளியிடப்பெற்றது.